செ. கு. எண்: 156 நாள்: 02.09.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 2.9.2018

---

பேரூர் ஆதீன மடாதிபதி திரு. சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் அருகே உள்ள முதலிபாளையம் என்னும் கிராமத்தில் பிறந்த திரு. சாந்தலிங்க ராமசாமி அடிகளார் தன்னுடைய 15-வது வயதிலேயே மடப்பணிகளில் தன்னை ஈடுபத்திக் கொண்டவர்.

திரு. சாந்தலிங்க ராமசாமி அடிகளார் 1967-ம் ஆண்டு ஜுலை மாதம் பேரூர் ஆதீனமாக பொறுப்பேற்று, அன்று முதல் ஆதீன வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும், சமுதாய வளர்சிக்கும் அரும்பணியாற்றியவர். தமிழ் மீது அதிகம் ஆர்வர் கொண்டு, தமிழ் பள்ளியைத் தொடங்கியவர். ஏராளமான பக்தர்களின் நன்மதிப்பையும் அன்பையும் பெற்றவர். அனைவரிடமும் அன்பாக பழகக்கூடிய பண்பாளருமான பேரூர் ஆதீன மடாதிபதி திரு. சாந்தலிங்க ராமசாமி அடிகளார் மறைவு பேரூர் மடத்தின் சிஷ்ய கோடிகளுக்கும், ஆன்மிக அன்பர்களுக்கும் ஒரு பேரிழப்பாகும்.

பேரூர் ஆதீன மடாதிபதி திரு. சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களை இழந்து வாடும் சிஷ்ய கோடிகளுக்கும், ஆன்மிக அன்பர்களுக்கும் பெரியோர்களுக்கும், எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**